மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.86/2020

வாக்குமூலம்: பி.வா.சா.1 முத்துப்பழனிச்சாமி

<u>05.09.2024:</u> சாட்சி ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு <u>குறுக்கு விசாரணை :-</u> இவ்வழக்கின் வாதி ஆறுமுகம் மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர் உங்கள் தம்பிகள் என்றால் சரிதான். வாதி ஆறுமுகம் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நீங்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் வாய்க்கால் பிரச்சனைக்காக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் என்ன பரிகாரம் கோரியுள்ளீர்கள் என்றால் பொதுப்பாதை என் தம்பி ஆறுமுகம் (வாதி) தென்னை மரம் வைத்துள்ளது சம்பந்தமாக பரிகாரம் கோரியுள்ளேன். 2012ம் வருடம் உங்களுக்குள் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நீங்கள் சொத்துக்களை அளந்துதான் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்றால் சரிதான். கிணறு மற்றும் அதை சுற்றியுள்ள இடம் என 21 செண்டு தனியாக அளந்துவிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். அதேபோல் பொதுப்பாதை இடத்திற்கு என 21 செண்டு விட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் சொல்லும் பொதுப்பாதை 4 மீட்டர் என்றால் சரிதான். ஆறுமுகம் (வாதி) அவருக்கு ஒதுக்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்திற்குள்தான் தென்னை மரங்கள் வைத்துள்ளார் என்றால் சரிதான். நீங்கள் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நிலத்தை பார்வையிட நியமிக்கவேண்டி மனு செய்திருந்தீர்கள் என்றால் சரிதான், அதன்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் கட்டணம் ரூ.5000/-ஐ நீங்கள் செலுத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் பணம் கொடுக்காமல் நீதிமன்ற ஆணையர் சொத்தை பார்வையிடாதவாறு காலம் கடத்தி வந்தீர்கள் என்றால் சரியல்ல. வாதி ஆறுமுகம்தான் ஆணையர் கட்டணம் செலுத்தி நிலத்தை பார்வையிட வைத்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றை பார்வையிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை சுமார் 1-1/2 வருடத்திற்கு முன்பு பார்வையிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்டபோது வாதி வைத்ததாக சொல்லும் தென்னை மரங்கள் சுமார் 12 அடி உயரத்தில் இருந்தது என்றால் அதற்கு மேல் இருந்தது. தென்னை மரங்கள் பொதுப்பாதைக்கு இடையூறு இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. பொதுப்பாதையும், ஆறுமுகத்துக்கு

ஒதுக்கப்பட்ட ஒரு ஏக்கர் இடமும் தனித்தனியாக அளந்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் வாதி ஆறுமுகம் பொதுப்பாதையில் தென்னை மரங்கள் வைத்துள்ளார். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பொதுப்பாதையில் தென்னை மரங்கள் இல்லை என குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. வடக்கு கடைசியில் 5ஏ1 என்ற பூமியில் ஒரு ஏக்கர் ஆறுமுகத்துக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு அடுத்த பாகம் யாருக்கு என்றால் என் தம்பி கந்தசாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 3.8 மீட்டர் அளவில் பாதை உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். கந்தசாமி பூமிக்கு தென்புறத்தில் உங்கள் பூமி உள்ளது என்றால் சரிதான். உங்கள் பாக பூமி அமைந்துள்ள இடத்தில் பாதை 3.6 மீட்டர் அகலத்தில் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. மீண்டும் உங்கள் பாகத்திற்கு தென்புறத்தில் வாதி ஆறுமுகத்திற்கு பூமி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பாதைக்கு தென்புறத்தில் வேறு நபர்களின் நிலம் உள்ளது, அவர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 3ம் நபர் கிணறு வெட்டி, மண்ணை பாதையில் போட்டதால் பாதையின் அகலம் குறைந்துள்ளது என்றால சரியல்ல. வாதி ஆறுமுகம் பொதுப்பாதையில் ஆககிரமிக்கவில்லை என்றும், மேற்சொன்ன பக்கத்து நிலத்துக்காரர் கிணற்று மண்ணை பாதையில் கொட்டியதால் பாதையின் அகலம் குறைந்துள்ளது என்றால் சரியல்ல. உங்களிடமோ, வாதி மற்றும் 2ம் பிரதிவாதியிடமோ மாட்டு வண்டி பயன்பாட்டில் இல்லை என்றால் சரிதான். சுமாா 10, 20 வருடங்களாக மாட்டு வண்டி இல்லை என்றால் சரிதான். உங்கள் குடும்பத்துக்கும், உங்கள் பெரியப்பா குடும்பத்துக்கும் பாத்தியப்பட்ட பொதுக்கிணறு உள்ளது என்றும், அதில் உங்களுக்கும் உங்கள் சகோதரர்களுக்கும் தலா 1/6 பங்கு உள்ளது என்றால் சரிதான். ஆறுமுகம் தன்னுடைய வடபுறம் உள்ள பாகத்தில் தனிக்கிணறு வெட்டியுள்ளார் என்றால் சரிதான். குடியிருப்பு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பொதுக்கிணற்றிலிருந்த தண்ணீர் எடுக்கிறீர்களா என்றால் நாங்கள் யாரும் தண்ணீர் எடுப்பதில்லை. நானும் ஆறுமுகமும் தண்ணீர் எடுப்பதில்லை, 2ம் பிரதிவாதி கந்தசாமி மட்டும் பொதுக்கிணற்றை பயன்படுத்தி வருகிறார். நானும், ஆறுமுகமும் தனித்தனியாக கிணறு வெட்டி விட்டோம். பொதுக்கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து பயன்படுத்த இரண்டு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் மூவருமே தனித்தனியாக குழாய் அமைத்துள்ளோம். நானும், ஆறுமுகமும் தனித்தனியாக குழாய் அமைத்துள்ளோம். நான் அமைத்த குழாயில் 50 அடி அளவில் கந்தசாமி குழாய் பொருத்தி பயன்படுத்தி வருகிறார்.

பாகப்பிரிவினை பத்திரம் எழுதிய பிறகுதான் குழாய் அமைத்துக் கொண்டீர்கள் என்றால் சரிதான். பொதுக்கிணற்றிலிருந்து வாதி ஆறுமுகம் அதற்கு அடுத்து கந்தசாமி, அதை தொடர்ந்து உங்கள் பூமி ஆகியவற்றில் நில வாய்க்கால் உள்ளதை இறுதியாக ஆறுமுகம் பாகம் வரை நில வாய்க்கால் செல்வதை நீங்கள் யாரும் தடுத்து இடையூறு செய்யக்கூடாது என பாகப்பத்திரத்தில் எழுதிக்கொண்டீர்கள் என்றால், இல்லை. பாகப்பிபிரிவினைக்கு முன்பு நீங்கள் எவ்வாறு நீர் பாசனம் செய்தீர்கள் என்றால், நான் அதற்கு முன்பு பூமிக்கே செல்லவில்லை. அதனால் பாகப்பிரிவினைக்கு முன்பு பூமி எவ்வாறு இருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு முன்பு பூமிகளுக்கு தண்ணீர் பாசனம் செய்ய நில வாய்க்கால் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றும், அந்த வாய்க்கால் வரப்பின் வழியாக நீங்கள் மூவரும் நடந்து சென்று வந்து கொண்டிருந்தீர்கள் என்றால் சரியல்ல. வாய்க்காலே இல்லை. நில வாய்க்கால் இருந்தது என்றும், அதனை நீங்களும் 2ம் பிரதிவாதி கந்தசாமியும் அழித்துவிட்டீர்கள் என்றால் சரியல்ல. ஆறுமுகம் நீங்கள் வாய்க்காலை அழித்ததை ஆட்சேபித்தபோது நீங்களும் 2ம் பிரதிவாதியும் ஆறுமுகத்துடன் தகராறு செய்தீர்கள் என்றால் சரியல்ல. ஆறுமுகம் அவருடைய பாகத்தற்கு தனிப்பட்டா பெற்றுள்ளார் என்றால் சரிதான். நீங்களும் 2ம் பிரதிவாதி கந்தசாமியும் கூட்டுப்பட்டா வைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். வாதி ஆறுமுகம் பொதுக்கிணறு மற்றும் அவருடைய தனிக்கிணற்றிலிருந்து அவருடைய பாக பூமிகளுக்கு உங்கள் பூமி வழியாக செல்லும் வாய்க்கால் வழியாக தண்ணீர் பாசனம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த வாய்க்கால் கரை வழியாக ஆறுமுகம் நடந்து சென்று வந்தார் என்றும், அதை நீங்களும் 2ம் பிரதிவாதியும் தடுத்துவிட்டீர்கள் என்றால் சரியல்ல. பொதுக்கிணற்றில் உங்கள் மூவருக்கும் தலா 2 நாள் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் அழித்த வாய்க்காலை மீண்டும் ஆறுமுகத்திற்கு போட்டுக்கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. தனிக்கிணற்றிலிருந்து வாதி அவருடைய மற்றொரு பாகத்திற்கு எவ்வாறு தண்ணீர் கொண்டு செல்லமுடியும் என்றால் பொதுப்பாதையில் உள்ள அவருடைய தனிக்குழாயின் மூலம் கொண்டு செல்லலாம். உங்களுக்கு தனிப்பட்ட எதிர்வாதம் எதுவும் இல்லை என்றும், 2ம் பிரதிவாதி கந்தசாமியுடன் சேர்ந்துகொண்டு பொய்யாக எதிர்வாதம் செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றும், எதிர்கோரிக்கை பரிகாரங்கள் எதுவும் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :– இல்லை.**

**Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

R. KARTHIKEYAN

Digitally signed by R. KARTHIKEYAN
Date: 2024.09.05 16:39:50 +0530

**District Munsif,**
**Palani.**